வர்த்தகம், வாணிபம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

## கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம்

# பதவி வெற்றிடங்கள்

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் தலைமை அலுவலகத்திற்காக பின்வரும் பதவி வெற்றிடங்களுக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 1. தொழில்நுட்ப அதிகாரி - (தலைமை அலுவலகத்திற்கு) (Technical Officer)

**ஆட்சேர்ப்பு முறை** - ஒப்பந்தம் / ஒரு வருட காலத்திற்கு

**சம்பள அளவு** - ரூபா [65,633 + 17,800 = 83,433]

**தகைமைகள்:**

பதவியுடன் தொடர்புடைய விடயத்துறையில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் 7ஆம் நிலைக்குக் (NVQ 7) குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**அல்லது**

குறித்த பதவியுடன் தொடர்புடைய துறையில் பொறியியல் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா (HNDE) அல்லது தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா (NDT) பெற்றிருத்தல் மற்றும் கூட்டுத்தாபனம், சபை அல்லது அங்கீகாரம் பெற்ற நியதிகள் நிறுவனத்தில் குறித்த துறையில் குறைந்தபட்சம் 03 வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**அல்லது**

பதவியுடன் தொடர்புடைய விடயத்துறையில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றனில் 6ஆம் நிலைக்குக் (NVQ 6) குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல். மற்றும் கூட்டுத்தாபனம், சபை அல்லது அங்கீகாரம் பெற்ற நியதிகள் நிறுவனத்தில் குறித்த துறையில் குறைந்தபட்சம் 05 வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**அல்லது**

பதவியுடன் தொடர்புடைய விடயத்துறையில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றனில் 5ஆம் நிலைக்குக் (NVQ 5) குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல். மற்றும் கூட்டுத்தாபனம், சபை அல்லது அங்கீகாரம் பெற்ற நியதிகள் நிறுவனத்தில் குறித்த துறையில் குறைந்தபட்சம் 10 வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

### 02. சாரதி - 03 வெற்றிடங்கள் (தலைமை அலுவலகத்திற்கு) (Driver)

**ஆட்சேர்ப்பு முறை** - ஒப்பந்தம் / ஒரு வருட காலத்திற்கு

**சம்பள அளவு** - ரூபா [40,834 + 17,800 = 58,634]

**தகைமைகள்:**

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் 02 திறமைச் சித்திகள் சகிதம் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் கனரக வாகனம் செலுத்துவதற்காக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட உரிமம் மற்றும் சாரதி உரிமத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் குறைந்தபட்சம் 03 வருட காலம் வாகனம் செலுத்தும் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

- 2024-01-12ஆம் திகதிய 01/2024ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் வாழ்க்கைச் செலவுப் படி

மேற்கூறிய தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள் சுயமாகத் தயாரித்துக்கொண்ட விண்ணப்பப் படிவங்களை 2026-08-31ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் தலைப்பைக் குறிப்பிடவும்.

**தலைவர்,**
**கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம்,**
**இல. 27, வொக்ஷோல் வீதி,**
**கொழும்பு 02.**

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED